**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI &
Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.04
https://ngmtamil.in/

# சங்க இலக்கியம் பேசும் தொல்தமிழர் வாழ்வியலும் பண்பாட்டு கூறுகளும்

**முனைவர் ம.பாபு,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் – 641014. அலைபேசி–9659985020. eMail: m.varunbabu8@gmail.com, ORCID ID – https://orcid.org/0009-0000-6531-9707

**ஆய்வுச் சுருக்கம்**

மனிதனுடைய வளர்ச்சியினை இரண்டாகப் பகுத்துக் காணலாம். அவற்றை அகவளர்ச்சி என்றும், புறவளர்ச்சி என்றும் அழைக்கலாம். விலங்குகளில் உயர்ந்த விலங்கு மனிதனாவான். இயற்கைப் படைப்பின் மணிமுடியாக விளங்குபவன் மனிதன். தனக்கேயுரிய சிறப்புப் பண்புகளாலேயே மனிதன். பிற விலங்குகளினின்றும் வேறுபடுகிறான். அவனுடைய மனமே அவ்வேறுபாட்டை உருவாக்குகின்றது. சமுதாய விலங்காகிய மனிதன் பிற மனிதர்களோடு கலந்து வாழும்போது தன்னலத்தை ஓரளவு புறக்கணித்துப் பொது நலத்தைப் பேணவேண்டியவனாகிறான். இதற்குச் சில பண்புகள் தேவைப்படுகின்றன. அன்பு, அருள், வாய்மை, தூய்மை, ஒப்பரவு, கண்ணோட்டம், ஈகை, நாணம் முதலிய பண்புகள் அனைத்தும் மனிதன் பிறரோடு கொள்ளும் உறவினுக்கு அடிப்படையானவைகளேயாம். இவ்வுறவு தன்னுடைய சிறு சமூக எல்லைக் கோட்டைக் கடந்து செல்லுகிறது. அஃது உலக உறவாக வளர்கின்றது. அதுவே மனித குலத்தின் சிறப்புப் பண்பாகும்.

**திறவுச் சொற்கள்**

பண்பாடு, வாழ்வியல், சான்றாண்மை, காதல், ஈகை, உலக ஒருமைப்பாடு, வீரம், நட்பு, விருந்தோம்பல்

**முன்னுரை**

மனிதனுடைய அறிவும் அனுபவமும் மேற்சொன்ன பண்புகளாக மட்டுமின்றிப் பருப்பொருள்களாகவும் வெளிப்படுகின்றன. உணவு, உடை, உறையுள், சிற்பம், ஓவியம் போன்ற பிற பொருள்கள் வாயிலாகவும் மனிதனின் வளர்ச்சி வெளிப்படுகின்றது. இவை எல்லாம் தோன்றுதற்கு அடிப்படையான அறிவு அகச்சார்புடையதாயினும், மேற்கூறிய நுண் பொருட்டாய பண்புகளோடு ஒப்பிடுகையில் புறத்தன்மையனவேயாம். இத்தகைய வளர்ச்சியையே புறவளர்ச்சியெனக் குறித்தோம். இவ்விரண்டு வகை வளர்ச்சிகளும் இணைந்து அமைந்த சமுதாயமே முழுவளர்ச்சி பெற்ற சமுதாயம் எனலாம்.

இவ்விரண்டு வகை வளர்ச்சிகளையும் முறையே பண்பாடு, நாகரிகம் என்னும் சொற்கள் குறிப்பதாகக் கொள்ளலாம். அதாவது பண்பாடு அகவளர்ச்சியையும், நாகரிகம் புறவளர்ச்சியையும் குறிக்கும் என்பதாகும். அத்தகைய அகவளர்ச்சிக்கு காரணமான பண்பாட்டுக் கூறுகளை சங்க இலக்கியங்களின் வழி தொல்தமிழர் வாழ்வியலும் பண்பாட்டு கூறுகளும் இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

**பண்பாடு**

ஆங்கிலத்தில் **'Culture'** என்று சுட்டுவதற்கு நேராகவே 'பண்பாடு' என்பது ஆளப்படுகிறது. இச்சொல்லை இப்பொருளில் முதன்முதலில் ஆண்ட பெருமை **அறிஞர் டி.கே.சிதம்பரநாத முதலியாருக்கே** உரியது என்பர். பண்பாடு என்னும் சொல்லிலிருந்து அமைத்துக் கொள்ளப்பட்டது இச்சொல்லாகும். பயிரிடுதற்கு ஏற்றவாறு நன்கு செய்யப்பட்ட நிலம் என்றும் சொல்லப்படும். அந்நிலமே பக்குவப்பட்ட நிலம் என்றும் சொல்லப்படும். அந்நிலமே நற்பொருள்கள் விளைய இடனாக அமையும் சிறப்பினதாகும். பக்குவப்பட்ட மனிதனையும் பண்பட்ட மனிதன் என்போம். பண்பட்ட உள்ளமுடையாரே பண்பாடு கொண்டவர்கள். ஆங்கிலத்தில் **நன் செய் நிலம் Cultivated land** எனப்படுகிறது. பயிர் விளைத்தல் என்னும் பொருளிலும் **Cultivate** என்பது பயன்படுகிறது. நல்ல பழக்க வழக்கங்களை மேற்கொள்ளல் என்னும் பொருளிலும் இச்சொல் ஆளப்படுகிறது. எனவே, **'செம்மைப்படுத்தல்'** என்னும் பொருள் இச்சொற்கு அமைந்திருத்தலைக் காணலாம்.

மக்களின் பழைய வரலாற்றில் அவர்கள் இயற்றிக் கொண்ட கருவிகள், சமூகப் பழக்கம், வழக்கம், நம்பிக்கை, சமயம் முதலியவற்றைப் பண்பாடு என்ற சொல்லால் குறிக்கின்றனர். மக்களின் அறிவு நலம், ஒழுக்க உயர்வு, கொள்கை நலம், பண்புநலம், வாழ்க்கை நலம் ஆகியவை மென்மேலும் திருந்திய நிலையே பண்பாடு எனலாம். **"ஒருவன் தன் குணநலன்களை நிரப்புவதிலும், தன்னைச் சூழ்ந்த சமுதாயத்தின் நலன்களைப் பேணுவதிலும் பேரவாக்கொண்டிருக்கும் நிலை பண்பாடாகும்" என்பார் மாத்யூ ஆர்னால்டு.** திருந்திவரும் பண்பாட்டினால் ஒருவனது ஆன்ம இயற்கையில் கனிவும் இனிமையும் மிகும்; உள்ளொளி பெருகும்; உயிர்த்தத்துவம் மிளிரும்; பிறர் மீது அன்பும் அருளும் மிகும்; ஓர் இனத்தின் பண்பாடு அதன் இலக்கியம், நடையுடை, மொழி, கலைகள், குறிக்கோள், சமயக் கொள்கை, சமயப் பொறை, அரசியற் கொள்கை, அரசியல் வரலாறு, சமுதாய நிலை, பெண்களின் நிலை, அறிவியற் சிறப்பு, கல்வி நிலையங்கள் முதலியவை மூலம் விளக்க முறுகின்றது.

**சான்றாண்மை**

வள்ளுவர் போன்ற பெருமக்கள் அறிவு வளர்ச்சியினும் பண்பு வளர்ச்சிக்குச் சிறப்பளிக்கின்றனர். அரம்போலும் கூர்மையுடைய கல்வியறிவு உடையார் எனினும் மக்கட் பண்பு அற்றவர்கள் ஓரறிவு உடைய மரம் போல்வர் என்கிறார். மக்கட்பண்புடையோரையே வள்ளுவர் சான்றோர், பெருந்தகையான், நயனுடையான் என்று எல்லாம் அழைத்தார். இவர்கள் பிறர்க்கென வாழும்

பெற்றியுடையவராவர். பழியெனின் உலகையே பெறுவாரெனினும் கொள்ளார். புகழ் எனின் உயிரும் கொடுப்பர்; அஞ்சுவது அஞ்சி அடக்கமே உருவாய், ஆரவாரத்தை விலக்கி வாழ்வார்; அயராது உழைப்பர்; ஆனால் அவ்வுழைப்பு முழுதும் பிறர்க்கெனவே கருதுவர். இத்தகு சான்றோர், தாம் பெற்ற இன்பத்தினைப் பிறரோடு பகிர்ந்து கொள்வர். இந்திரருடைய அமிழ்தே கிடைப்பினும் இனிதெனத் தனியே உண்ணார். இவர்கள் இருப்பதனாலேயே உலகம் இன்றளவும் நிலைத்திருக்கிறது.

"பண்புடையார் பட்டுண்டு உலகம் அஃதின்றேல்
மண்புக்கு மாய்வது மன்" (குறள் 996)

என்றார் வள்ளுவர். இதில் சான்றாண்மை என்ற பண்பு பற்றி அறியமுடிகிறது

**வீரம்**

கொடுப்பதிலும் பெறுவதிலும் மட்டும் பண்பாட்டை காட்டவில்லை. வீரத்திலும் பண்பாட்டை விதைத்துச் சென்றவன் தமிழன் இதற்கு காலத்தால் அழியாத பல காவியக் கதைகளை சுமந்து நிற்கும் புறநானூற்று நூலே இதற்குச் சாட்சியாக இருக்கிறது. எதிரிநாட்டு படையினை தாக்கும் பொழுது கூட ஈரமும் இரக்கமும் உள்ள பண்பு இருந்தனை காண முடியும். வீரர் அல்லாதவர்கள், புறங்காட்ட ஓடுவார், புண்பட்டார், முதியோர், இளையோர், இவர்கள் மீது படைக்கலம் செலுத்தலாகாது என்பதும் புறநானூற்றால் அறிய முடிகிறது.

"ஆவும், ஆன் இயற் பார்ப்பன மாக்களும்,
பெண்டிரும், பிணியுடையீரும், பேணித்
தென் புல வாழ்நர்க்கு அருங் கடன் இறுக்கும்
பொன் போல் புதல்வர்ப் பெறாஅதீரும்
எம் அம்பு கடி விடுதும், நும் அரண் சேர்மின்' என" (புற.பா.9)

இப்பாடலில் 'அறத்தின் நெறியின்படி' போர் புரியும் பண்புடையவன் என்று பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடியது.

புறமுதுகிட்டு ஓடுவதும், புறமுதுகில் அம்பு பட்டு வீழ்ந்து போவதும் அவமானம் எனக் கருதிய பரம்பரை தமிழ்ப்பரம்பரை. போரில் அடிபட்டு மாண்டு போன தன் மகன் இறந்த செய்தி அறிந்த ஒரு தமிழ்த்தாய் போர்க்களம் நோக்கி நடக்கிறாள். அப்போது சொல்கிறாள், இறந்து போன என்மகன் நெஞ்சிலே அம்பு பட்டு இறந்திருக்க வேண்டும். ஆனால் முதுகில் அம்பு பட்டு புறமுதுகு காட்டி இறந்து போயிருப்பானேயானால் அவன் வாய்வைத்து பால்குடித்த இந்த மார்பகங்களை அறுத்தெறிவேன் என்று சபதம் செய்து செல்கிறாள். போர்க்களத்தில் நெஞ்சிலே அம்புபட்டு மாண்டு கிடக்கிறாள் மகன். அதனை பார்த்து அவனை ஆரத்தழுவி அழும் தாயைத்தான் சங்க இலக்கியங்கள் நமக்கு சொல்லிக் கொடுத்து இருக்கின்றன. ஆக வீரத்தில் கூட பண்பாட்டை பதிவு செய்த இனம். போரில் தந்தையை இழந்து, கணவனை இழந்து இறுதியில் தனக்குத் உதவியாக இருக்கும் ஒரே மகனையும் போர்க்களத்திற்கு அனுப்பி வைத்த புறநானூற்றுத் தாயும் ஒரு தமிழச்சி என்பதில்

பெருமை கொள்வோம். இதுதான் தரணிபோற்றுய தமிழர் பண்பாடு என்பதனை உலகிற்கு உரக்கச் சொல்வோம்.

மேலும், பண்டைய தமிழர்கள் வீரத்தைத் தொல்காப்பியப் புறத்திணை இயல் எடுத்துக் கூறுகின்றது. பெரும்பாலும் தற்காப்பு முறையில் தான் போர் நடைபெற்றது. தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை என்ற நால்வகைப் படைகளும் போரில் ஈடுபட்டன. வெட்சி, வஞ்சி, உழிகை, தும்பை என்ற நான்கு புறத்திணை பகுதிகளிலும் தமிழர்களின் போர்முறைகள் தொல்காப்பியத்தில் காணப்படுகின்றன.

**நட்பு**

சங்ககாலத் தமிழர் நட்பினை பெரிதும் மதித்து வாழ்ந்தனர்.

"முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும்உண்பர் நனிநாகரிகர்" (நற்றி. 355)

என்ற மோசிகீரனார் பாடல் வழி அறியலாம்.

புறநானூற்றில் சோழன் நல்லுருத்திரன் பாடலில், எலி போன்றோர் நட்பு கூடாது. புலி போன்றோர் நட்பு வேண்டும். என்கிறார்.

"எலிமுயன் றனைய ராகி, உள்ளதம்
வளன்வலி உறுக்கும் உளம் இலாளரோடு
இயைந்த கேண்மை இல்லா கியரோ" (புறம்.190)

"புலிபசித் தன்ன மெலிவில் உள்ளத்து
உரனுடை யாளர் கேண்மையொடு
இயைந்த வைகல் உளவா கியரோ" (புறம்.190)

திருவள்ளுவரும் உண்மையான நட்புக்கு இலக்கணம் கூறியுள்ளார்.

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு (குறள் 786)

என்றனர் வள்ளுவர். வாழ்வில் மேன்மேலும் இன்பம் தருவது நற்பண்பு உடையவரின் நட்பு என்று,

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு (குறள் 783)

என்றார் வள்ளுவர். இங்கு நட்பு என்ற பண்பு அறியமுடிகிறது.

சங்க காலத்தில் அரசர்கள் கொடை வள்ளல்களாக இருந்திருக்கிறார்கள். தம்மைப் பாடி வரும் புலவர்களுக்கும் மற்றவருக்கும் பொன்னையும் பொருளையும் வரையாது கொடுத்து மகிழ்ந்தமை சங்க இலக்கியங்களால் உணர முடிகிறது. பாரி இவர் கடையேழு வள்ளல்களில் ஒருவராகச் சங்க இலக்கியத்தில் போற்றப்படுபவர். ஓரி இவர் வல்வில் ஓரி எனவும் ஆதன் ஓரி எனவும் அழைக்கப்பெறுவார். காரி, பேகன் போன்றோர் கடையேழு வள்ளல்கள் என்று போற்றப்பட்டனர். பாரி முல்லைக்குத் தேரையும் பேகன் மயிலுக்குப் போர்வையையும் அளித்து அழியாப் புகழ்

பெற்றனர். ஆற்றுப்படை இலக்கியங்கள் மன்னர்களின் கொடைத் தன்மையைக் கூறுவனவாக இருத்தலைக் காண்கிறோம். கல்வெட்டுக்கள், செப்பேடுகள் மூலமும் மன்னர்களின் கொடைத்தன்மை பண்பு அறிய முடிகிறது.

தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு

(அதிகாரம்:ஒப்பரவறிதல் குறள் எண்:212)

என்று நாம் ஈட்டும் செல்வம் மற்றவருக்கும் கொடுப்பதற்கே என்கிறார் வள்ளுவர்.

“கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று” (புறநானுறு 204)

வாங்கிக்கொள் என்று நாமே மனமுவந்து கொடுப்பது மிகச் சிறந்த பண்பு என்கிறது சங்க இலக்கிய நூலான புறநானுறு.

**விருந்தோம்பல்**

சங்க அக, புறப் பாடல்களில் விருந்தோம்பல் முறை காணப்படுகிறது. தலைவியின் களவு வாழ்வில், தலைவனைத் தோழி வரைவு கடாவும் நிலையில், பகற்குறியை இரவுக்குறியாக மாற்றும் முயற்சியில் விருந்தோம்பல் அமைகிறது. தலைவியின் கற்பு வாழ்வில், வினையிற் பிரிந்த தலைவனை வரவேற்கும் நிலையிலும் தலைவனின் ஊடலைத் தீர்க்கும் கருவியாகவும் விருந்தோம்பல் சுட்டப்படுகிறது. தமிழரின் தலைசிறந்த பண்பாடுகளில் ஒன்று விருந்தோம்பல். வீட்டிற்கு வரும் உறவினர்களை மட்டுமல்ல, முகம் தெரியாத யாராக இருந்தாலும் அவர்களை அன்போடு உபசரித்து முகம் மலர உணவளித்து உள்ளன்போடு வழியனுப்பும் வாழ்வியலை தருகிறது தமிழரின் பண்பாட்டுக் கோட்பாடு. காலம் காலமாக இப்பண்பாட்டை கட்டிக்காத்து வருவது நம் தனிச் சிறப்பு. இதிலும் ஒரு படி மேலே சென்று இது குடும்பத் தலைவியின் கடமைகளில் ஒன்றாக கட்டமைக்கப்பட்டிருக்கிறது. விருந்தோம்பலை இல்லத்தரசியின் கடமையாக வேறு எந்த இனமும் நாடும் சுட்டிக்காட்ட வில்லை. இதனை தமிழ் இலக்கியங்களும் பதிவு செய்திருக்கின்றன. சங்க இலக்கியத்தில் நற்றிணையில் ஒரு பாடல்,

“விருந்து விருப்புறூஉம் பெருந் தோட் குறுமகள்”

(நற். முல்லை 221)

சென்று வினை முடித்துத் திரும்பிவரும் தலைவன் தன் தேர்ப்பாகனிடம் தம் காதலி விருந்தை விருப்பத்துடன் அளிக்கும் பண்புடையடையவள் அத்தன்மை இப்போது தடைப்பட்டுள்ளது. அத்தடையை நீக்கும் பொருட்டு தேரை விரைந்து செலுத்துக என்று தலைவன் மகிழ்ந்துரைத்தது இப்பாடல். இதில் சங்ககாலத்தில் விருந்தை விருப்பத்துடன் அளிக்கும் பண்பு அறிய முடிகிறது.

**முடிவுரை**

பண்பாட்டின் கூறுகளான வழக்கங்கள், வழக்காறுகள், ஒழுக்கசாரங்கள், ஒழுக்க விதிகள், சட்டங்கள் முதிலியவற்றால் நெறிப்படுத்தப்படுகின்றன. அந்த நிலையில் தான் சமூக அமைப்பு

ஒழுங்குபட்டு அமைகிறது. அத்தகைய அகவளர்ச்சிக்கு காரணமான பண்பாட்டுக் கூறுகளை சங்க இலக்கியங்களின் வழி தொல்தமிழர் வாழ்வியலும் பண்பாட்டு கூறுகளும் மனிதர்களின் 'நடத்தை நெறிகள்' என தமிழ் இலக்கியங்களில் வாயிலாக அறியமுடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**

[1]. நற்றிணை, புலியூர்க் கேசிகன், ராம் பிரசுரம், சென்னை – 600001.

[2]. புறநானூறு உரைவேறுபாடு தொகுதி – 1, முனைவர் அ.செல்வராசு, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை – 600050.

[3]. பொருளதிகாரம், இளம்பூரணனார் உரை, சாரதா பதிப்பகம், சென்னை – 600014.

[4]. உலகப் பொதுமறை திருக்குறள் உரைவிளக்கம், தமிழ்மறைக் காவலர் திருக்குறளார் வீ.முனிசாமி, திருமகள் நிலையம், சென்னை – 600001.